# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**ந.க.எண் : 1031/ 2022 / எம்சி. 8 நாள் 25.3.2022**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல்- நிகழ்ச்சி நிரல் அனுப்புதல்– தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும் **மாமன்ற சிறப்புக் கூட்டம் 30.3.2022 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் **மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் மாமன்ற கூடத்தில்** நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டப்பொருள்

**(ஒப்பம்) மேயர்**

**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/ உத்திரவின்படி அனுப்பப்படுகிறது/**

**மாமன்றச் செயலாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

# கோயம்புத்தூர் மாநகராட்சி

## வரவு செலவு திட்ட அறிக்கை தாக்கல் செய்யும்

## மாமன்ற சிறப்புக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்



| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் | 1 |
| | ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1. | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2021-2022-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 2 |
| | நன்றியுரை | |

அ) **திருக்குறள்**

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

(390)

**விளக்கம்**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

**- திருவள்ளுவர்.**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

| பொருள் - | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி 2021-2022-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
|---|---|

------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2021-2022-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–அனுமதிக்கலாம். ந.க.எண்.8750/2021/பி2

---

(ஒப்பம்) மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி